# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR
## (DEPOSITION OF WITNESS

**வா.சா.3-)**

**அசல் வழக்கு எண். 90/2019**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. முருகேசன் | தாலூக்கா | சூலூர் |
| தந்தை பெயர் | சண்முகம் | கிராமம் | சூலூர் |
| பணி | நீதிமன்ற ஆணையாளர் | மதம் | |
| வயது | | | |

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 24.03.2026 is accordance with the provision of Act X of 3331

**முதல் விசாரணை**

**1.** நான் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையாளராவேன். நான் அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் அறிக்கை, புகைப்படம், சர்வேயர் வரைபடம் நான் கொடுத்தது என்றால் ஆமாம். வழக்கு சொத்தை 24.03.2022 தேதியில் சர்வேயருடன் சென்று பார்வையிட்டேன். பார்வையிடுவதற்கு முன்பாக நான் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ஆமாம். நான் தனிப்பட்ட முறையில் வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

2. எனது அறிக்கையில் 2ம் பக்கத்தில், ஆக்கிரமிப்பை காட்டும் வண்ணமாக வழக்கு சொத்தில் வரைபடத்தில் சிவப்பு வண்ணம் காட்டப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். சர்வேயர் வரைபடத்தில் உள்ளதை நான் குறிப்பிட்டு காட்டியுள்ளேன் என்றால் ஆமாம். சர்வேயர் அனுபவப்படி ஒரு வரைபடமும், ஆவணத்தின் படி ஒரு வரைபடமும் கொடுத்தார் என்றால் ஆமாம். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அனுபவத்தில உள்ள வரைபடத்தில் இரண்டு ஆக்கிரமிப்புகள் காட்டப்பட்டுள்ளது. அதில் தென்புற ஆக்கிரமிப்பாக பாத்ரூம் கட்டி முழுவதுமாக ஆக்கிரமிப்பு உள்ளது. வடபுறமாக மாடிக்கு செல்லும் படிக்கட்டு உள்ளது. வரைபடத்தில் உள்ள அளவுகள் என்

முன்னால் அளக்கப்பட்டது. சர்வேயரின் வரைபடப்படியும், நான் அளந்ததின் படியும், தாவா சொத்தில் வடபுறமும், தென்புறமும் ஆக்கிரமிப்பு உள்ளது என்றால் ஆமாம்.

**பிரதிவாதிகள் இந்த வழக்கில் ஏற்கனவே ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர்.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham

District Munsif, Sulur